Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

உங்கள் வியாபாரம்
சிறக்க ஈழநாதத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 22 08.10.2004 வெள்ளிக்கிழமை ஓசை 135

## அரசடித்தீவில் மகளிர் எழுச்சி நாள் நிகழ்வு

(நமது நிருபர்)

2ம் லெப்ரினன்ட் மாலதியின் 17வது ஆண்டு நினைவு நாள் மற்றும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் என்பன மட்டு. அம்பாறை மாவட்டங்களிலும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மட்டு. அம்பாறை மகளிர் அரசியல்துறை செய்துள்ளது.

பிரதான நிகழ்வு அரசடித்தீவு பொது விளையாட்டு மைதான

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



2ம் லெப்ரினன்ட் மாலதியின் 17வது ஆண்டு நினைவும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டன ஆரம்ப நிகழ்வுக் காட்சிகள்.

## கடுக்காமுனையில் இன்று சிரமதானம்

2ம் லெப்ரினன்ட் மாலதியின் 17ம் ஆண்டு நினைவு நாளையும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு இன்று கடுக்காமுனையில் மாபெரும் சிரமதானம் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகளின் மாவடி முன்மாரிக்கோட்ட அரசியல் துறையினர், கடுக்காமுனை சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை அதிபர் உட்பட பொதுமக்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தேர்தலின் போது அடையாள அட்டை!

# தமிழ்க் கூட்டமைப்பு நிராகரித்தது!

(நமது நிருபர்)

**தேர்தல் வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட் டையை கட்டாயமாக்கும் சட்ட மூல த்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்காது சபையைவிட்டு வெளியேறிச் சென்றனர்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்ற மக்கள் ஆணையைப்பெற்றே நாடாளுமன்றத்துக்கு வந்ததே தவிர தேர்தலை நடத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்காக அல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நேற்று இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட போதும் ஒருவருட காலத்துக்குள் சகலருக்கும் அடையாள அட்டைகளை வழங்கப்பட்ட பின்னரே சட்ட மூலம் அமுலுக்கு வருமென அரசு அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கை பொறு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கல்லாற்றில் கைக்குண்டு வீச்சு; குடும்பஸ்தர் படுகாயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கல்முனை வீதி கல்லாறு எனுமிடத்தில் புதன் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் 54 வயது குடும்பஸ்தரொருவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நாகப்பன் பாஸ்கர

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## முத்துக்கல் கிராமத்தில் குடும்பஸ்தர் சுட்டுகொலை!

(நமது நிருபர்)

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் புதன் கிழமை இரவும் குடும்பஸ்த்தரொருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முத்துக்கல் கிராமத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அக் கிராமத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சத்தியலிங்கம் (வயது 37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவதினம் இரவு 9.00 மணியளவில் இவரது வீட்டிற்கு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பிக்குவின் அடாவடித்தனத்துக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் கண்டனம்

(நமது நிருபர்)

இருதயபுரம் கிராம சேவையாளர் எஸ்.விஜயரெத்தினம் பௌத்த பிக்கு ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்தை வடக்குக் கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறு மிலேச்சத்தனமான முறையில் நடந்து கொண்ட பிக்கு மீது பாரபட்ச மற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்:- மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மாலதி நினைவாக சிரமதானம்

(நமது நிருபர்)

2ம் லெப்ரினன்ட் மாலதியின் 17வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று பன்சேனை கிராமத்தில் சிரமதானப்பணி நடைபெற்றது.

பிரதேச அரசியல் பொறுப்பாளர் கார்த்திக் தலைமையில் நடைபெற்ற சிரமதானத்தில் பன்சேனை ஆலய வீதி, பன்சேனை கிராம அபிவிருத்தி சங்கக் கட்டிட வளைவு, பலநோக்கு கூட்டுறவு சங்கக்கிளை அமைப்பதற்கான இடம் என்பன துப்பரவு செய்யப்பட்டன.

பன்சேனை கிராம உத்தியோகத்தர் ந.மயிலிப்போடி கூட்டுறவு கிளை முகாமையாளர் ச.ரவீந்திரநாதன், பன்சேனை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ந.சிவலிங்கம் உட்பட பலநூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## தம்பிலுவில்லில் மகளிர் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

2ம் லெப்ரினன்ட் மாலதியின் 17ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டும் அம்பாறை மாவட்ட மகளிர் அமைப்புப் பிரதிநிதிகளுக்கான மகளிர் சங்கம நிகழ்வு நேற்று காலை 10.00 மணிக்கு தம்பி லுவில் மத்திய மகா வித்தியாலயத் தில் தம்பிலுவில் மகளிர் அமைப்புச் செயலாளர் செல்வி.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## தாதியர் வேலை நிறுத்தத்தால் பாதிப்பு

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டம் கரையோரப் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் அவ் வைத்திசாலைகளில் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்ப

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### தகவல்துளி

1913இல் விற்றமின் ஏ சத்து கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்கரான மக்கொலும் டேவிஸ் என்பவரே இதனைக் கண்டுபிடித்தவராவார்.

## செய்தித் துளிகள்

### திறந்து வைப்பு

(நமது நிருபர்)

வவுனியாவில் அண்மையில் மகப்பேற்று மருத்துவமனை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள நேரிய குளப் பகுதியிலே இவ்வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. கலாநிதி ஏ.கேதீஸ்வரன் இவ்வைத்தியசாலையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

### சங்கம நிகழ்வு

(நமது நிருபர்)

யாழ் மாவட்ட மகளிர் அமைப்புகளின் சங்கம நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் பொதுச் சுடரேற்றல் நிகழ்வுடன் இனிது ஆரம்பமானது. இந்நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றலினைத் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தலைமை உரையினை முன்பள்ளி இணைப்பாளர் கணபதிப்பிள்ளை வசந்தகுமார் நிகழ்த்தினார். முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.யோகராஜா, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.பத்மினி சிதம்பரநாதன், தமிழினி, ஆகியோர் சிறப்புரையினை நிகழ்த்தினர்.

### சம்பள உயர்வு

(நமது நிருபர்)

நாட்டிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கு கடந்த 05 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக வருடாந்த சம்பள உயர்வு வழங்கவுள்ளனர்.

இதற்கென திறைசேரியிலிருந்து 10 கோடியே 30 லட்சம் ரூபா நிதி சமுர்த்தி அமைச்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### நவராத்திரி விழா

(சசி)

ஆண்டு தோறும் வருகின்ற புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் தசமிவரையுள்ள ஒன்பது நாட்களும் முப்பெரும் சக்திகளுக்கு விழா எடுக்கப்படுவது வழக்கம். இந்த வகையில் இவ்வருடம் எதிர்வரும் 13ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்களும் பூசைகள் நடைபெற்று பத்தாம் நாள் எதிர்வரும் 22ம் திகதி விஜயதசமி பூசையுடன் நிறைவு பெறும்.

### மக்கள் கோரிக்கை

(சசி)

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொக்கட்டிச்சோலை கிராமத்திலிருந்து மண்முனைத் துறையடி வரை செல்லும் பிரதான பாதையினை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதிப் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குன்றும், குழியுமாகப் பழுதடைந்து காணப்படும் இப்பாதையின் சீர்கேட்டினால் நகர்ப் பகுதியிலிருந்து கிராமப் பகுதிகளுக்கு சமூகம் தரும் பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய அலுவலக உத்தியோகஸ்தர்கள், பொது மக்கள், பல்வேறுபட்ட சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர். மாவட்டத்தில் பல பகுதிகளில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளை இவை மட்டும் ஏன் இந்த நிலையில் காணப்படுகின்றது எனப் பொது மக்கள் கேள்வி தெரிவிப்பதாக அக்கோரிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

### விழிப்புட்டல் ஊர்வலம்

(நமது நிருபர்)

வேள்ட் விஷன் சிறுவர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்குக் காய்ச்சல் விழிப்பூட்டல் ஊர்வலமானது: அண்மையில் தம்பட்டைக் கிராமத்தில் சம்மேளனத் தலைவர் எஸ்.திலீபராஜ் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் தம்பட்டை அ.த.க. பாடசாலை மண்டபத்தில் டெங்குக் காய்ச்சல் பற்றிய விழிப்பூட்டல் கூட்டமொன்றும் நடைபெற்றது. இதில் பொது மக்கள், சிறுவர் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு மாவட்ட பிரதேச செயலகங்களில் நான்கு நாள் நடமாடும் சேவை

(கி.ரகுலஷ்ளளசனா)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் நடமாடும் சேவையானது 09ம், 10ம், 11ம், 12ம், திகதிகளில் ஓட்டமாவடி பிரதேச செயலகத்திலும், வாகரைப் பிரதேச செயலகத்திலும், மண்முனை வடக்கு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.**

நடமாடும் சேவை மட்டக்களப்பில் நடை பெறுவது பற்றி மட்டக்களப்பு அரச அதிபர் சண்முகம் அவர்களை ஈழநாதம் தொடர்பு கொண்டு கேட்டபோது: மட்டக்களப்பில் சில ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் நடை பெறுவதை இட்டு நாம் மகிழ்வடைகின்றோம்.

இப்போது மேற் குறிப்பிடப்பட்ட 04 இடங்களில் நடை பெறவுள்ள சேவையில் இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவைமட்டுமே நடை பெறும். எனவே தேசிய அடையாள அட்டை பெறாதோர், மற்றும் தேசிய அடையாள அட்டைகள் பழுதடைந்தோர் மேற்படி இடங்களுக்குச் சென்று உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் 07 நாட்களுக்குள் அடையாள அட்டை பெறும் வாய்ப்பு ஏற்படும் என்றார்.

## யாழ் பண்ணைப்பால படைக் காவலரணை பின் நகர்த்த இராணுவத் தளபதி இணக்கம்

(நமது நிருபர்)

போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள யாழ் பண்ணைப் பால ஸ்ரீலங்கா இராணுவ காவல் நிலையத்தை பின் நகர்த்துவதற்கு யாழ் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இன்று உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புகளின் இணைய பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கத்தை அவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டின் மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பின் போது இணைய பிரதிநிதிகள் இராணுவ தளபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதற்கு பதிலளித்த அவர், உயர் பாதுகாப்பு வலயத்தில் மேலும் 500 குடும்பங்கள் மீளக் குடியமர்த்துவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும்,

முகமாலை சோதனைச் சாவடி வழியான போக்குவரத்திற்குரிய நேரத்தை மேலும் 2 மணித்தியாலங்கள் அதிகரிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளபோதும், இராணுவத்திலுள்ள ஆளணிப் பற்றாக் குறை காரணமாகவே இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதென்றும், இருப்பினும் இன்னும் 5 நாட்களில் இதனை அமுல் படுத்துவதற்கான தீர்மானம் அறிவிக்கப்படும் என்ற விபரங்களையும் வெளியிட்டுள்ளார்.

## சட்டவிரோத ஆயுதங்கள் ஒப்படைப் போருக்கு சன்மானம்

(நமது நிருபர்)

உள்நாட்டில் சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் அதனைக் கையளிப்பதற்காக இரண்டு மாத கால அவகாசம் வழங்கியுள்ள இலங்கை அரசாங்கம் இதனை ஊக்குவிப்பதற்காக சன்மானத் தொகையையும் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் கணிப்பீட்டின்படி உள்நாட்டில் சுமார் 50 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இன்று பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் படி கடந்த முதலாம் திகதி முதல் எதிர் வரும் நவம்பர் 30 ம் திகதி வரை சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கு பொது மன்னிப்பு காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இக் காலப் பகுதியில் ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு பின்வரும் அடிப்படையில் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

ரி 56 ரக துப்பாக்கி - ரூபா 50 ஆயிரம்
கைத் துப்பாக்கி மற்றும் ரிவோல்வர் - ரூபா 15 ஆயிரம்
303 ரக துப்பாக்கி - ரூபா 30 ஆயிரம்
தன்னியக்க துப்பாக்கி ரூபா 25 ஆயிரம்
கைக் குண்டு - ரூபா 5 ஆயிரம்

என ஒவ்வொன்றிற்கும் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

## யாழ் முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டிற்கு எதிராக துண்டுப் பிரசுரம்

(நமது நிருபர்)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் யாழ் மாவட்ட கிளை மகாநாட்டிற்கு யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

ஸ்ரீலங்கா மு.கா. மாவட்ட அமைப்பாளர் மௌலவி எம்.சுபியான் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்கின்றார்கள்.

இந்த மகாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து மீளக் குடியமர்ந்துள்ள யாழ் முஸ்லிம் சமூகம் என்ற பெயரில் புதன்கிழமை பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

"எங்கள் அமைதியான வாழ்வைக் குலைக்க வேண்டாம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்தப் பிரசுரத்தில், மகாநாடு என்ற போர்வையில் இன ஒற்றுமையை சீர்குலைக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்றும்,

இதனை உதாசீனம் செய்து மகாநாடு நடத்தப்பட்டால் முஸ்லிம் மக்களின் எதிர்ப்பினை நேரடியாகக் காட்ட நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் போராட்டம் பற்றியும், விடுதலைப் புலிகள் பற்றியும் முஸ்லிம் காங்கிரஸ் நேரம் ஒரு விதமாக விமர்சித்து வருவதையும் அந்தப் பிரசுரம் சுட்டிக் காட்டியுள்ளது.

## சாரணியத்தின் முழுப்பலனைப் பெறுவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### ஆணையாளர் முஸ்தபா

(நமது நிருபர்)

''பொது நிருவாகங்களில் சாரணியம் அறிமுகப்படுத்தப்படுவது வரவேற்கக் கூடிய விடயமாகும். மேலை நாடுகளில் சாரணியம் பொது ஸ்தாபனங்களிலும், பொது நிறுவனங்களிலும் அதிக வளர்ச்சி கண்டுள்ளது. தற்போது எமது பகுதியிலும், இந்நிலை ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சாரணியத்தை நமது நாட்டில் சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு தேசிய சாரணிய சங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. எதிர்வரும் காலங்களில் சாரணர் தொகையை அதிகரிப்பதிலும், பொது மக்களின் முழு ஆதரவைப் பெறுவதிலும் அக்கறை காட்டப்பட்டு வருகின்றன. சாரணியத்தின் முழுப்பயனையும் பெறுவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது கடமையாகும்"

இவ்வாறு விரிவுரையாளரும், உதவி மாவட்ட சாரணிய ஆணையாளருமான எம்.ஐ.எம்.முஸ்தபா கடந்த ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு சென்மேரிஸ் மாணவர் இல்லத்திடலில் இடம் பெற்ற சாரணியர் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார். அருட்சகோதரர் ஏ.தயா தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் சென்மேரிஸ் இல்லத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் புதிதாகச் சாரணியத்தில் இணைந்து கொண்டனர். இவ்வைபவத்தை அடுத்து புதிய சாரணர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இடம் பெற்றன. பயிற்சி வகுப்புக்களை உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா நடத்தினார்.



*உலக சமாதான தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பப்ரல் அமைப்பினால் 21.09.2004 அன்று மட்.போதனா வைத்தியசாலை சிரமதானம் பப்ரல் அமைப்பினரினால் மேற் கொள்ளப்படுவதனை படத்தில் காணலாம். (படம்:- தி.பாவு)*

# இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் முறுகலை ஏற்படுத்த சிறிலங்கா அரசு சதி

## சந்திரசேகரம் எம்.பி. கண்டனம்

(நமது நிருபர்)

இந்திய மீனவர்களை கைது செய்த சிறிலங்கா இராணுவம், "இந்திய மீனவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சிக்கினால் கொல்லப்படுவார்களென துண்டுப்பிரசுரம் விநியோகித்திருப்பதைத்தான் வன்மையாகக் கண்டிப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தெற்கு பேசாலைக் கடற்பரப்பில் தொழிலுக்காக வந்த இந்திய மீனவர்களை சிறிலங்கா இராணுவம் கைது செய்த போதே மேற்படி துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும் சேர்ந்து செய்கின்ற பாரிய சதி முயற்சியாகும்.

ஒரு பக்கம் சர்வதேச நாடுகளுக்கு தம்மை சமாதான விரும்பிகளாக காட்டிக் கொள்கின்ற சிறிலங்கா அரசு மறுபக்கம் எல்லா விதத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதையே தனது நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. கருணா விவகாரமும் இதற்கு ஓர் உதாரணமாகும்.

இத்தகைய முயற்சிகளினால் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களின் அரசியல் சக்தியையும் சிதறடிக்கும் முயற்சியில் அரசை வெற்றி பெற தமிழ் மக்கள் வாய்ப்பளிக்க மாட்டார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திர சேகரன் மேலும் தெரிவித்தார்.

# வீதி மின்விளக்குகள் பொருத்துமாறு மக்கள் வேண்டுகோள்

(நமது நிருபர்)

மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கன்னன்குடாக் கிராமத்திற்கு வீதி மின் விளக்குகளைப் பொருத்துமாறு மட்டக்களப்பு மின்சார சபையினருக்கு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வீதிமின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவு நேரங்களில் கிராமம் இருளில் மூழ்கிக் காணப்படுவதுடன் பொதுமக்கள் மத்தியில் திருடர்களின் அச்சமும் நிலவுகின்றது.மேலும் இவ்வீதி மின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் சிலர் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தினைப் பெற்று வீதிவிளக்குகளை எரியச் செய்கின்றனர். எனவே இந்நிலமை விரைவில் நீங்க மட்டக்களப்பு மின்சாரப் பொறியியலாளர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவ்வேண்டு கோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் 590 முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

(நமது நிருபர்)

சர்வதேச ஆசிரியர் தினத்தையிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், முன்பள்ளிக்கான கல்வி மேம்பாட்டுக் கழகமும் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட 590 முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் திருமலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு மக்கீசர் விளையாட்டரங்கில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு சில்வஸ்டன் ஹெட்டலுக்கு அழைத்து வரப்பட்டனர். தமிழர் புனர்வாழ்வுக் கழக செயற்திட்ட பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்பள்ளிக்கான கொடியினை முன்பள்ளி இணைப்பாளர் நித்திய பிரபா ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கொடியினை திருமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கிருபா ஏற்றி வைத்தார். இந்நிகழ்விற்கு திருமலை மாவட்ட அரச அதிபர் காமினி றொட்றிகோ பிரதம அதிதியாக கலந்து இந்நிகழ்வை மேலும் சிறப்பித்தார்.

# ஏறாவூர்ப் பற்றில் பெற்றோருக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு

(கர்சனன்)

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பெற்றோருக்கான விழிப்பூட்டும் கருத்தரங்கு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிள்ளைகளின் பெற்றோர், ச.முகாமையாளர்கள், ச.அ.உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் கி.பே.மனோகிரராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி சிறு குழுக்கள், சங்கங்கள் மூலம் பெற்றோருக்கு கல்வியின் அவசியம் பற்றி அறிவூட்டுவது எனவும் மற்றும் பல விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.



அண்மையில் தம்பட்டையில் நடைபெற்ற வேள்ட்விசன் சிறுவர் சம்மேளனம் நடாத்திய டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டல் ஊர்வலம் சிறுவர் ஊக்குவிப்பாளர் நந்தபாலு உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களையும் படத்தில் காணலாம். (படமும் தகவலும்:- நந்தபாலு)

# முதியோர், சிறுவர்களை மதியாதவர்கள் நாட்டின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைப்பவர்கள்

## -லயன்ஸ் கழகத் தலைவர் எம்.ஐ.ஏ.சக்கூர்-

(தர்மா)

முதியோர்கள் மதிக்கப்பட்டு சிறுவர்கள் பாதுகாக்கப்பட்டு வழிநடாத்தப்படும் பட்சத்தில் இந்த நாட்டில் அமைதி, சமாதானம், அன்பு, சுபீட்சம் என்பன நிலைபெறும். இதை விடுத்து முதியோர்களையும், சிறுவர்களையும் மதியாதிருப்பவர்கள் நாட்டின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைப்பவர்களாக மாறிவிடுகின்றனர்.

வடக்குக் கிழக்கு மாகாண சமூக நலத்துறையின் ஏற்பாட்டில் நாவிதன்வெளிப் பிரதேசசெயலகம், லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையில் நடாத்திய சர்வதேச முதியோர் வாரமும், சிறுவர்தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை லயன்ஸ் கழகத்தின் தலைவர் எம்.ஐ.ஏ.சக்கூர் தெரிவித்தார்.

நாவிதன்வெளிப்பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உதவிப் பிரதேச செயலாளர் வீ.ஜெகதீசன், நிருவாக உத்தியோகத்தர் எம்.இராமக்குட்டி இன்னும் உத்தியோகத்தர்கள் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், பாடசாலை அதிபர்கள், பெருந்தொகையான முதியோர்கள், சிறுவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

லயன்ஸ் கழகத்தலைவர் சக்கூர் தொடர்ந்து உரையாற்றுகையில் சிறுவர்கள் உலகத்தின் தூண்கள் இந்தத் தூண்களை சரியான முறையில் வழிநடாத்தி, பாதுகாத்து வழிகாட்டி ஊக்கமளித்து நிறுத்தினால் தான் அவர்கள் நிலையான தூண்களாக முடியும். சரியான முறையில் வழி நடாத்தப்பட வேண்டியவர்கள் தற்போது துஸ்பிரயோகம் செய்யப்பட்டு உலகளாவிய ரீதியில் அவர்களுக்கு அநீதி செய்து கொண்டிருக்கின்றனர் என்றார்.

# பொதுப் பணிகளை முன்னின்று நடாத்தும் இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்

## -முன்னாள் பா.உ அ.சந்திரநேரு-



(நந்தபாலு)

பொதுப் பணிகளை முன்னின்று தலைமை தாங்கி நடாத்தும் இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் இவர்கள் நாளைய சமூகத்தில் சிறந்தவர்களாக வரவல்லமை படைத்தவர்கள்.

இவ்வாறு அண்மையில் உலக நிறுவனத்தின் அனுசரணையில் திருக்கோவில் பாலக்குடா பொது மைதானத்தில் நடைபெற்ற சிறுவர் விளையாட்டு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேரு தெரிவித்தார்.

சிறுவர் கழகத் தலைவர் எல்.சுபாஜினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்த நிகழ்வில் சிறுவர்களின் முயற்சியைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. இவர்களை வழிநடத்துகின்ற நிறுவனமும் சமூகத்திலுள்ள மூவின மக்களும் சிறார்களுக்கு சிறப்பான சேவை புரிகின்றது. அத்துடன் இந்த நிறுவனத்தின் சேவையானது ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவை எனவும் தமதுரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உலக தரிசன நிறுவன ஊழியர்கள், சிறுவர் கழக அங்கத்தவர்கள் எனப் பலர் உரையாற்றியதுடன் விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# மட்/கன்னன்குடா மகாவித்தியாலயத்தில் இன்று ஆசிரியர் கௌரவிப்பு

(சசி)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மண்முனை மேற்குப் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு மட்-கன்னன்குடா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மண்முனை மேற்குப் பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முகம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் மண்முனை மேற்குப் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிவும் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மற்றும் சிறப்பு, அதிதிகளின் உரையும், மாணவர்களால் ஆசிரியர்கட்கு மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளதோடு பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# வவுணதீவுப் பிரதேச பாலர் நிலையங்களுக்கான விளையாட்டு விழா

(எம்.யுவராஜ்)

வடக்குக் கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்கள அனுசரணையுடன் சர்வதேச சிறுவர்தின, சர்வதேச முதியோர் வார நிகழ்வை முன்னிட்டு மண்முனை மேற்கு பாலர் நிலையங்களுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 11ம் திகதி காலை 9.00 மணிக்கு மட்-வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் என்.சிறிசங்கர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி, சிறப்பு விருந்தினர்களாக மண்முனை மேற்கு பிரதேச கல்விப் பணிப்பாளர் எஸ் சண்முகம், மட்டக்களப்பு சிறுவர் நன்நடத்தை அதிகாரி செல்வி தா.ஞானசௌந்தரி, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஆர்.ஸ்ரீனிவாசன் கௌரவ விருந்தினர்களாக மட்-தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கு.தேவராஜா, சர்வோதய நலன் திட்ட இணைப்பாளர் கே.இளந்திரயன், நேத்திரா நிறுவனத்தலைவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மண்முனை மேற்குப் பிரதேச பாலர் நிலையங்கள் பல கலந்து கொள்கின்றன. இதில் மாணவர்களின் பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

# 2ம் லெப்டினன் மாலதியின் நினைவை முன்னிட்டு மாபெரும் சிரமதானம்

(நமது நிருபர்)

2ம் லெப்டினன் மாலதியின் 17வது ஆண்டு நினைவை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை அரசியல்த்துறையினர் பல்வேறுபட்ட பொதுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் நேதாஜின் ஏற்பாட்டில் மட்- கொறுவாமுனையிலிருந்து விளாவெட்டுவான் வரை புதிய வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டதுடன், இப்பகுதியிலுள்ள ஆலயங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் கொறுவாமுனைப் பொறுப்பாளர் கிரிராஜ் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்த்தர்கள் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பயிற்சிப் பட்டறை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல சமுர்த்தி பயனுகரிகளுக்குமான பயிற்சிப்பட்டறை அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

# எந்த மீடியாதான் வந்தாலும் எழுத்துக்கிருக்கும் பங்கும், செயற்பாடும் இருந்து கொண்டேதான் இருக்கும்

# முல்லைக் கோணேசுடன் ஒரு நேர்காணல்

## முல்லைக் கோணேஸ்



**தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கியவர்களில் முக்கியமான படைப்பாளி முல்லைக்கோணேஸ். வன்னியின் கலை இலக்கியச் செயற்பாட்டில் இக்காலப்பகுதியில் கூடிய பங்களிப்பை வழங்கியவர். அரசியல்மயப்பட்ட எழுத்துக்கு முதன்மையளித்துவரும் முல்லைக்கோணேஸ் சிறுகதைகளுடன் கவிதைகளையும் எழுதிவருகிறார். கோணேசின் இன்னொரு பரிமாணமாக ஓவியமிருக்கின்றது. பெரும்பாலான தமிழ் ஓவியர்களைப் போல் இவரும் சிறு பத்திரிகைச் சூழலில் கூடியதொடர்புடையவர் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து நின்று முதன்மையாகச் செயற்படுகின்றார். இவை எல்லாவற்றினதும் அனுபவத் திரட்சியாக இதுவரையில் *நாளை உன் தேசம். இரண்டாவது காலம்* என இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.**

**கேள்வி:-** எழுத்திலா அல்லது ஓவியத்திலா முத லில் உங்களுக்கு ஈடுபாடு வந்தது?

**பதில்:-** சின்ன வயதில் எனக்கு ஓவியத்தில் தான் ஈடுபாடு இருந்தது. அப்போதெல்லாம் வரையக்கூடிய இலகுவான கோட்டுப் படங்கள் எல்லாம் வரைவதில் தான் நிறைய ஆர்வம் இருந்தது. அதற்கு முன்னர் ''பிறைமறி'' படிக்கிற காலங்களில் சாமிப்படங்கள், இயற்கைக் காட்சிகளை எல்லாம் வரைந்து கொண்டு போய்க்காட்டுவேன். அப்போது எனக்கு வகுப்பாசிரியராக இருந்த கணேஸ் ரீச்சர் (திருமதி. க.இராஜசிங்கம்) தட்டிக் குடுக்கிறது மட்டுமல் லாமல் அதிபருக்கும் கொண்டு போய்க் காட்டு வார். அதனால் பள்ளிக்கூடத்தில் என்னை எல்லோருக்கும் அப்போது நன்றாகத் தெரிந்தி ருந்தது.

வீட்டில் கூட எனக்கு எல்லோரும் ஆதரவு தந்தார்கள். படிக்காமலிருந்து படம் கீறுகிறியே என்று யாருமே சொன்னதில்லை. ஐயா எனக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் வாங்கித் தந்தார். எனக்குப் பாடங்களிலேயே சித்திரப்பாடம் தான் விருப்பம். இதை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தாகம் சிறு வயதிலிருந்தே இருந்து வந்தது. ஆனால் இன்று வரைக்கும் அது கைகூடாமல் போனது எனது துரதிஸ்டவசமே என நினைக்கிறேன்.

எழுத முற்பட்டது என்னவோ 95 களுக்குப் பிறகு தான். ஆனால் சிறுவயதிலிருந்தே ஆர்வத்தோடு வாசிப்பேன். நான் வாசித்துக் கொண்டிருக்கின்ற சில சமயங் களில் ஐயா வந்து ''சத்தமாக வாசியப்பு நானும் கேட்பம்'' என்பார். அது இன்னும் எனக்கு உற்சாகமாக இருக்கும். அவர் ''காணும்''

**நேர்கண்டவர்:-கருணாகரன்**

என்கிற வரைக்கும் நான் ஏற்றி இறக்கி வாசித்துக் கொண்டிருப்பேன். எனக்கு எப்படி வாசிப்புப் பழக்கம் வந்ததென்நால் அண்ணர் பெரும் வாசிப்புக் காறன். அவர் ஒரு ''அவுட்மோட்டர் மெக்கானிக்'' காக இருந்தாலும் வாசிப்பதற்கு நிறையநேரத்தையும் பணத்தையும் செலவு செய்தார். வீரகேசரிப பிரசுரங்களை ஒன்றும் தவறாமல் வாங்குவார். இதை விட ஜனமித்திரன் வேறும் சில வெளியீடுகளும், குமுதம், கல்கி, சுந்தரி இன்னும் ஞாபகத்தில் இல்லாத நிறையச் சஞ்சிகைகளும் கொண்டு வருவார். ஆனால் அவைகளை அப்போது அவருக்குத் தெரியாமலேதான் படிக்க வேண்டி இருந்தது. பாடப்புத்தகங்களை படிக்கச் சொல்லித் தான் அவர் பேசுவார்.

அ.பாலமனோகரனின் நிலக்கிளி நாவலை நாலைந்து தடவைகளக்கு மேல் படித்திருப்பேன். அந்த நாவலில் வருகின்ற

**இலக்கியச் சுடர்**

**மிதுனன்**

பதஞ்சலியும் கதிர்காமரும் தண்ணிமுறிப்பு குளக்கட்டிலயும், முரலிப் பழக்காட்டிலயும் ஓடித்திரியிற மாதிரியான உணர்வை இப்போதும் கூட அனுபவிக்கமுடிகின்றது. அதன் ஈர்ப்பில் அப்போது அந்தப் பாத்திரங்களை வரைந்திருக்கின்றேன். இதை வாசித்து இருபது வருடங்களுக்கு மேலாகின்றது. இந்த வாசிப்புப் பழக்கமே என்னைப்பின்னாளில் எழுதவும் தூண்டியிருக்கும் என நினைக்கின்றேன். எனது முதல் கதை எப்படி உருவாகியதென்றால், ஐயா ஏக்கர் கணக்காக வயல் செய்வார். அந்த விளைச்சலும் அறுவடையுமே எங்கள் குடும்பத்தின் ஏற்றஇறக்கத்தை தீர்மானிக்கும். எங்கள் வீட்டில் ஏற்படுகின்ற தேவைகளெல்லாம் அறுவடைக்குப் பிறகு தான் நிறைவாகும். ஒரு தடவை விதைப்புக்குப் பிறகு, செழித்தது பயிர். வீட்டில் எல்லோரும் கற்பனைகளிலிருந்தோம். இம்முறை அவரவர் தேவைகளை ஐயாவுக்குச் சொல்லியிருந்தோம். எல்லாம் சூட்டடிப்புக்குப் பிறகு பாப்பம்'' என்றிருந்த சமயம் வெள்ளம் அந்த முறை வயலை அழித்தது. அந்தச் சம்பவம் எங்கள் எல்லோரையும் வருத்தியது. அதையே கதையாக எழுதினேன். அது எனது ''நாளை உன் தேசம்'' தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது.

**கேள்வி:-** நீங்கள் முயலும் ஆர்வம் எப்படியிருக்கின்றது? என்றாலும் ஓவியத்தின் புதிய சாத்தியப்பாடுகளில்

**பதில்:-** சில ''போட்ரைட்'' செய்திருக்கின்றேன். ஆனால் அதில் தொடர்ச்சி இல்லை. கோடோவியங்கள் செய்து வருகின்றேன். இன்னும் நிறைய ''பெயின்ரிங்'' பண்ண வேண்டும் என்று தாகமாக இருக்கு. பொதுவாகநிலக்காட்சிகளை குறிப்பாக வன்னியை எங்களுடைய சம காலத்தையும்.

**கேள்வி:-** உங்களுடைய கதைகளில் அதிகமான நிலக்காட்சிகளின் விவரணை இருப்பதன் பின்னணியாக இது இருக்கின்றதென்று நினைக்கின்றேன்?

**பதில்** இருக்கலாம்.

**கேள்வி:-** தொண்ணூறுகளில் எழுதத் தொடங்கி கவனத்தை ஈர்த்த சிறுகதைப்பட படைப்பாளியாக இருக்கிறீர்கள் தொண்ணூறுகளில் ஈழத்தச் சிறுகதைப் போக்கு எப்படி என்றுமதிப்பிடுவீர்கள்?

**பதில்:-** அது ஈழப்போர் உக்கிரம் பெற்ற காலம். போரின் அழுத்தங்களும் நெருக்கடிகளும் இழப்புக்களும் உச்சமடைந்த காலம். அந்தக் காலத்தின் அனர்த்தங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நிறையச் சிறுகதைகளாக எழுதியிருக்கின்றார்கள். இடம் பெயர்வுகளை வைத்துக் கூடுதலான கதைகள் வந்துள்ளன. அதிக இடம்பெயர்வுகள் நடந்தது 90களில் தான் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்ற படைப்பாளிகளின் சிறுகதைகள் தங்கள் அனுபவங்களை ஒருவிதமாகவும், இடம்பெயர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுக்கு வெளியே வசிப்பவர்கள் தங்களுடைய அனுபவங்களை இன்னொரு விதமாகவும், இடம்பெயர்ந்தும் பெயராமலும் தங்களுடைய தொப்புள் கொடி உறவை அறுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டும் அவலப்பட்டும் அந்த அவலங்களுக்குள்ளேயும் நின்று விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து இன்னொரு சாராரும் நிறையச் சிறுகதைகளை எழுதியிருக்கிறார்கள். இதில் சில கதைகள் தேறின. பல தவறின. கதைகள் கலாபூர்வமானதாகவும் காத்திரமானதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணியதை விடப் போராட்டத்தை ஆதரித்து எழுத வேண்டுமென்பதே அனேக எழுத்தாளர்களதும் குறியாக (நான் உட்பட) இருந்தது. அதனால் நிறையச் சிறுகதைகள் குறித்து கனதியையும் கவனிப்பையும் பெறாமலே போனது. ஆனாலும் தொண்ணூறுகளில் சிறுகதைகள் ஈழத்துச்சிறுகதைகளிலும் இன்னும் சொல்லப் போனால் தமிழ்ச் சிறுகதைகளிலும் மிகப் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதில் ஈழத்திலும் புலம் பெயர் தேசத்திலும் நிறையப் பேரைச் சொல்லலாம். எண்பதுகளில் சமூக அரசியல் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த பலர் இக்காலகட்டத்தில் தமது எழுத்து வெளிப்பாட்டை அனுபவத்தின் சாரத்தோடு தீவிரமாக, உக்கிரமாக எழுத்தில் முன்வைக்கின்றனர். இதுவே நமது இன்றையச் சிறுகதைகளின் இயல்பாகவும் சிறப்பாகவும் இருக்கின்றது.

**கேள்வி:-** எங்களடைய போராட்ட வாழ்வின் அனுபவ வெளிப்பாடுகள் எந்தளவுக்கு இலக்கியமாக்கப்பட்டிருக்கின்றன?

**பதில்:-** நல்லகேள்வி.

எங்களுடைய போராட்ட வாழ்வனுபவத்தை எந்த ஒரு படைப்பாளியாலும் அதன் முழுமயான அனுபவ வெளிப்பாட்டுடன் கொண்டு வரமுடியவில்லை. கொண்டு வர முடியாதென்பதே எனது கருத்து. போராட்டத்தின் பால்போராளிகளும் மக்களும் கொடுத்த விலை அளவிட முடியாது. அது எழுத்திலோ வேறு கலை வடிவத்திலோ கொண்டுவர முடியாது?

இருப்பினும் இயன்றவரை படைப்பாளிகள் இலக்கியமாகவும் சில இசைப் பாடல்களாக, ஒளிப்படங்களாகவும் பதிவு செய்திருக்கின்றார்கள். அதிலும் போராட்டம் புதிய பரிமாணமும் முனைப்பும் பெற்ற வன்னிச் சூழலில் இருந்து தான் அதிகமான படைப்புக்கள் பதிவாகியிருக்கின்றன.

கருணாகரனின் ''ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்'' அமரதாஸின் ''காலவெளி'' சித்தாத்தனின் ''காலத்தின் புன்னகை'', தாமரைச் செல்வியின் ''ஒரு மழைக்கால இரவு'', ''அழுவதற்கு நேரமில்லை.'', பிரதீபகுமரனின் ''ஆரண்ய கனவு'' ,முல்லைக்கமலின் ''மனமும் மனத்தின் பாடலும்'', வளநாடனின் ''சமவெளி நோக்கி'', இன்னும் கூடத் தொகுப்புகளாக வெளிச்சத்தின் ''வாசல் ஒவ்வொன்றும்'' ''ஆனையிறவு'', ''செம்மணி'', ''எழு''வின் சிறுகதைகள்''. வானதி வெளியீட்டகத்தின் ''கனவுக்கு வெளியான உலகு'' ''எழுதாத உன் கனவு'' ''வேர்கள் துளிர்க்கும்'' ஆகிய மூன்று தொகுப்புக்கள். ஆதிலட்சுமி சிவகுமாரின் ''என்கவிதை'' நிலாந்தனின் ''வன்னி மான்மியம்'' ''யாழ்ப்பாணமே ஓ... எனது யாழ்ப்பாணமே'' தி.உதயசூரியனின் ''கண்ணம்மா'' தீபா குமரேஷின் ''புரிதல்'' தமிழ்க்கவியின் ''வானம் வெளிச்சிடும்'' இப்படி இன்னம் இன்னும் ஏராளமான இலக்கியப்பதிவுகள் இடம் பெற்றிருக்கின்றன. இதையும் விட நிறையக் கூட்டுத் தொகுப்புக்கள் வெளிவர இருந்தன. ஆனால் இறுக்கமான பொழுதுகளில் ஒருவருக்கொருவர் நெருக்கமாகவும் ஆதரவாகவும் அன்பாகவும் இருந்தோம். அப்போது இவ்வாறான ஆரோக்கியமான விடயங்களில் அக்கறையாகவும் ஆர்வமுடனும் இருந்தோம் இயங்கினோம். இப்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையில் திசைகள் விரிய மீண்டும் சிதறுண்டு போனோம். ஆளாளுக்கு அவரவர் அவசரங்களோடு இயங்குகிறோம். வேறென்ன....

**கேள்வி:-** எழுத்தின் மீதான கவர்ச்சி குறைந்து வருகின்றது. இலக்கியஈடுபாடு வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் வேறு மீடியாக்கள் இந்த இடத்தை பிடித்துவிட்டதென்றும் சொல்லப்படுகின்றதே.!

**பதில்:-** அப்படிச் சொல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.வேறெந்த மீடியாக்கள் வந்தாலும் எழுத்துக்கிருக்கும் பங்கும், வலுவும், செயற்பாடும் இருந்து கொண்டு தானிருக்கும். மொழியின் வெளிப்பாட்டு வடிவங்கள் இரண்டு. ஒன்று ஒலி வடிவம் மற்றது வரிவடிவம் வரிவடிவம் மனிதனுடைய அறிவின் கண்டுபிடிப்பு. ஒலிக்குறிப்புகளை வரிவடிவத்தில் கொண்டு வந்த மனிதன் இப்பொழுது ஒலியிலையோ ஒளியிலையோ எந்த வெளிப்பாட்டைச் செய்வதற்கும் வரிவடிவத்தின் துணையைத் தான் தேடுகிறான் இசைக்கோ வேறு ஒளி மூலமான சினிமா அல்லது விவரணப்படங்களுக்கோ அல்லது நாடகங்களுக்கோ கூட அடிப்படையாக எழுத்து வடிவிலான குறிப்புகளோ பிரதிகளோ தான்தேவையாக இருக்கின்றது.

இவ்வளவு தொழில்நுட்பங்களும் தொடர்பாடல்களும் வளர்ச்சியடைந்த இந்தியாவில் திசனரி 80 புத்தகங்கள் வெளியாகிறதாக ஒரு தகவல் சொல்கிறது. எந்த மீடியா வந்தாலும் எவ்வளவு கவர்ச்சியாக வந்தாலும் எழுத்தின் முக்கியத்துவம் குறைநது விடப் போவதில்லை.

**கேள்வி:-** எங்கள் சிறுகதைகளின் அமைப்புப் பற்றிக் கூறுங்கள்?

**பதில்:-** எங்கள் சிறுகதைகள்அனேகம் கவனம் பெறாமல் போனதற்குக் காரணம் அது கொண்டிருக்கும் அமைப்பில் புதிய மாற்றங்களை காணாததால் தான் என்றே கருதுகினேன். இன்று சிறுகதைக்களம் புதிய புதிய பரிசோதனை முயற்சிகளையெல்லாம் கண்டிருக்கிறது. பல கோட்பாடுகளில் பரிமாணித்திருக்கின்றது. பலபண்புகளுடன் விரிந்திருக்கிறது. ஆனால் நாங்களோ மிகச் சாதாரணமாகவே இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறோம். யதார்த்த தளத்திலும் நாங்கள் அதனுச்ச சாத்தியப்பாடுகளை நோக்கி நகர இடமுண்டு.

**கேள்வி:-** வரலாற்றையும், சமகாலத்தையும் இணைத்து நீங்கள் எழுதிய ''சரித்திரங்களில் இருந்து சொல்லப்பட வேண்டிய கதை'' கூடுதல் வரவேற்பைப் பெற்றது. ஆனால் அந்தக் கதையின் முழுமைஇன்னும் எட்டப்படவிலை என்று தான் படுகின்றது?

**பதில்:-** அதை எழுதும் போதும் இதே அனுபவம் எனக்கும் ஏற்பட்டதுதான். அதை எழுத எழுத அது விாவுபெற்றுக் கொண்டே போகும் போல இருந்தது. கண்ணுக்குள் கதைக்களமும் பாத்திரங்களும் விரிந்து கொண்டே போனது. அருமையான ஒரு நாவலாக அதை எழுதலாம் போலவும் எழுத வேண்டும் எனவும் எனக்குள் தோன்றியது. ஆனால் அதை ஒரு நெருக்கடியான நேரத்திற்குள் எழுதிக் கொடுக்க அதுதான் பலரையும் அந்தக் கதையை அப்படியாக எண்ணும்படி வைக்கிறதென நினைக்கிறேன்.

**கேள்வி:-** அநேகமாக அரசியல் சார்ந்த படைப்புலகம் தான் ஈழத்திலக்கியத்தின் முகமாக இருக்கின்றது. அரசியலின் தீவிரம் படைப்பைப் பாதிப்பது தொடர்பாக உங்கள் கருத்தென்ன?

**பதில்:-** அரசியலின் போக்குகளுக்கேற்ப அதனைச் சார்ந்து படைப்புச் செயற்பாடு இயங்குவது தவிர்க்க முடியாததே. இருப்பினும் படைப்பையே அரசியலுக்காகத் தாரைவார்த்துக் கொடுப்பது தான் சகிக்க முடியாமலும் படைப்பு தோற்றுப் போவதற்கும் ஏதுவாக அமைகிறது. அது நீண்டு வாழாமலும் போகிறது. அரசியலைச் சார்ந்து ரஞ்சகுமார், உமா வரதராஜன், சாந்தன், மு.புஸ்பராஜா, அ.இரவி போன்றோர் அருமையான நல்ல சிறுகதைகளை எழுதியிருக்கிறார்கள். அது போல் சேரன், சு.வில்வரெத்தினம், ம.பொன்னம்பலம், புதுவை இரத்தினதுரை. வ.ஐ.ச.ஜெயபாலன், சண்முகம் சிவலிங்கம், கருணாகரன், நிலாந்தன் போன்றோர் மிக அற்புதமான கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். படைப்பு கலாபூர்வமாகவும், செழுமையாகவும் வரும் போது அதில் எந்த அரசியற் தீவிரமும் உள் இணைந்திருக்குமே தவிர வெளியே துருத்துதிக் கொண்டிருக்காது. எங்கள் படைப்பின் வெற்றியும் தோல்வியும் சிறப்பும் சிறப்பின்மையும் சரியும் பிழையும் உண்மையும் உண்மையில்லாத் தன்மையும் இங்கே தான் நேர்ந்து விடும் அபாயமிருக்கிறது. படைப்பாளியின் பார்வையும் அவனது நெர்மையும் படைப்பை உண்மைக்கருகாக வைத்திருக்கும். இல்லாத போது எல்லாமே பிரச்சினைக்குரிய ஒரு வலுவான துறையென்றே எண்ணுகிறேன்.

**நன்றி:- வெளிச்சம்.**

# உலக செய்திகள்

## ஈராக்கில் அமெரிக்க படை தாக்குதல்; அறுபது பேர் பலி



(பக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க விமானப் படையினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் அறுபது தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். பலூஜா ரமணி நகர்களிலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இத் தாக்குதலில் காயமுற்றவர்கள் பலூஜா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் இவர்கள் பெண்கள், மற்றும் குழந்தைகள் என தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக் செல்ல அனுமதி கிடையாது கடவுச் சீட்டுகளில் புதிய முத்திரை

(புதுடில்லி)

பிணைக்கைதிகள் பிரச்சினையைக் கையாள விரிவான கொள்கை ஏற்படுத்தப்பட வேண்டும். என்று மத்திய வெளியுறவு இணை அமைச்சர் அகமது கூறினார்.

இது தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் அகமது அளித்த பேட்டி ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மூன்று இந்தியர்களை மீட்க அரசு கடுமையாகப் பாடுபட்டது. அது மிகவும் சிக்கலான பிரச்சினை. அவர்களை மீட்க தீவிரவாதிகளுக்கு மத்திய அரசு ஒரு சதம் கூடத் தரவில்லை. எதிர்காலத்தில் இது போன்ற கடத்தல் சம்பவங்களைக் கையாள விரிவான கொள்கை ஏற்படுத்தப்பட வேண்டும். கடத்தல் காரர்களுடன் பேச்சு நடாத்துவதில்லை. என்பது இந்தியாவின் கொள்கை. இதன் அடிப்படையில் கொள்கை வகுக்கப்பட வேண்டும். ஈராக்கில் இன்னும் ஐந்தாயிரம் இந்தியர்கள் பணிபுரிகின்றனர்.

## சர்வதேச தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியா தென்கொரியா கூட்டு

(ராய்ட்டர்)

சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியாவும் தென்கொரியாவும் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளது.

தென்கொரியா அதிபர் ராஹ் மூ-ஹைன் மூன்று நாள் சுற்றுப் பயனாக இந்தியா வந்தார். இந்திய உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்திய பிறகு இரு தரப்பிலும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒழிக்க இணைந்து செயற்படுவது. இதற்காக பொதுவான ஒரு அமைப்பை உருவாக்குவது ஐ.நா. பாதுகாப்பு சபையில் அதிக உறுப்பினர்களை சேர்க்க இரு நாடுகளும் முயற்சி எடுப்பது வர்த்தகம், சுற்றுலா துறையை மேம்படுத்த விமானப் போக்குவரத்தை விஸ்தரிக்க மற்றும் பாதுகாப்புத் துறையிலும் ராணுவ நடவடிக்கைகளைப் பரிமாறிக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கப்பல்படை, கடலோரக் காவல் படை ஆகியவற்றிலும் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.


வரும் 2008ம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகத்தை 20 ஆயிரம் கோடிக்கு உயர்த்தவும் இருதரப்பிலும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## இந்தியா - ஜேர்மன் இடையே வர்த்த உடன்படிக்கை

இந்தியா ஜேர்மன் இடையே வர்த்தகம் அடுத்த ஆறு ஆண்டுகளில் 62 ஆயிரம் கோடியாக அதிகரிக்கும் என்று ஜேர்மன் நம்பிக்கை தெரிவித்துதுள்ளது.

ஜேர்மன் பிரதமர் ஜெர்டு ஷ்ரோடர் புதுடில்லி வந்துள்ளார். அவருக்குஅரசு சார்பாக சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. நேற்று டெல்லியில் இந்திய வர்த்தகக் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற கூட்டத்தில் ஷ்ரோடர் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில் இந்தியா ஜெர்மன் இடையே வர்த்தகம் அடுத்த 6 ஆண்டுகளில் ரூபா 62 ஆயிரம் கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனால் இந்த இலக்கை அடைய வேண்டு மென்றால் இந்திய நிர்வாகத்தினர் திறமையான முறையில் செயல்பட வேண்டும்.

## பாகிஸ்தான் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 39 பேர் பலியாகியுள்ளனர்




(ராய்ட்டர்)

பாகிஸ்தானின் மல்தான் நகரில் சுன்னா ஆன்மீகத் தலைவர் இஸாம் தாரிக்கின் ஓராண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திலேயே இக் கார் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இக் கார் குண்டு வெடிப்பில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். 80 பேர் காயங்களுடன் மல்தான் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் முல்தான் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முகமட் யூசூப் தெரிவித்தார்.

## சிறிலங்கா கடற்படை அச்சுறுத்தலை தவிர்க்க இந்திய நவீன ரோந்து கப்பல் கண்காணிப்பு

(சென்னை)

தமிழக கடல் பகுதியில் கடற்படையின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் இந்திய கடற்படைக்குப் புதிதாக வழங்கப்பட்ட நவீன ரக ஸ்பீட் போட் கப்பல்கள் ராமேஸ்வரம் கடல் பகுதியில் ரோந்து பணியை ஆரம்பித்தன.

இந்திய கடல் பகுதியில் அந்நியர்களின் ஊடுருவலைத் தடுக்கவும், கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், இந்திய கடற்படைக்கு சமீபத்தில் புதிதாக 6 நவீன ரக' ஸ்பீட் போட்' கப்பல்கள் வழங்கப்பட்டன. இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட இந்த சிறிய வகைக் கப்பல்கள் 25 மீற்றர் நீளம், 60 டன் எடை கொண்டது. 50 கடல் மைல் வேகத்தில் செல்லும் இந்தக் கப்பல்கள் ஆழ்கடலிலும் ஆழம் குறைவான கடல் பகுதியிலும் அதிவிரைவாகச் செல்லும் தன்மை உடையது. ஒரு கமாண்டர், பத்து வீரர்கள் பணியாற்றும் இக்கப்பலின் மேல்தளத்தில் முன்புறமும், பின்னாலும் சிறிய வகை பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

நாட்டின் கடலோரப் பாதுகாப்புக் கருதி கடற்படைக்கு வழங்கப்பட்ட கப்பல்களில் இரண்டு கப்பல்கள் தமிழக கடல் பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்துவதற்கு வந்துள்ளன. இதில் டி.84 எண்ணுள்ள கப்பல் நேற்று முன்தினம் முதல் ராமேஸ்வரம் கடல் பகுதியில் ரோந்து பணியை ஆரம்பித்தது. ராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடைப்பட்ட பாக்ஜலசந்தி கடற்பகுதி மிகவும் ஆழம் குறைந்த




கடற்பகுதியாக இருப்பதால் கடந்த காலங்களில் இங்குள்ள கடற்படையினர் சிறிய மரத்தாலான ரோந்து படகுகளில் தான் ரோந்து பணியில் ஈடுபட்டனர். இதனால் இலங்கையில் இருந்து அகதிகள் மற்றும் கடத்தல் பொருட்களை ஏற்றி வரும் அதிவிரைவு பிளாஸ்டிக் படகுகளைத் துரத்திச் சென்று பிடிக்க முடியாத நிலை இருந்தது. தற்போது இந்த சிறிய ரக விரைவுக் கப்பல் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், புலிகள் ஊடுருவல் மற்றும் கடத்தல் நடவடிக்கைகளை முற்றிலும் தடுக்க முடியும் என்று கப்பல் கமாண்டர் முத்துகிருஷ்ணன் தெரிவித்தார். இது குறித்து ராமேஸ்வரப் பகுதி கடற்படை அதிகாரி கூறியதாவது.

ராமேஸ்வரம் கடல் பகுதியில் ஏற்கனவே கடற்படைக்குச் சொந்தமான பெரிய கப்பலும், நான்கு ரோந்து படகுகளும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தற்போது புதிதாக வந்துள்ள இந்த அதிவிரைவுக் கப்பல் மூலம் 5 மீற்றர் கடல் ஆழமுள்ள பகுதிகளிலும், கரையோரத்திலும் கண்காணிப்பு பலப்படுத்தப்படும். மீனவர்கள் இந்திய கடல் எல்லை தாண்டிச் செல்லக் கூடாது. தவறுதலாகச் செல்லும் மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினால் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் ராமேஸ்வரம் கடற்படை முகாமில் புகார் செய்யலாம். அதன் அடிப்படையில் இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் பேசி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

## விசாரணைக்கு உதவும் அமெரிக்காவின் கூற்றை இந்தியா நிராகரித்தது

(ராய்ட்டர்)

அசாம் மற்றும் நாகலாந்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களின் விசாரணைக்கு உதவ தயார் என அமெரிக்கா அறிவித்ததை பாரதிய ஜனதாக் கட்சி நிராகரித்து விட்டது.

அசாம் மற்றும் நாகலாந்தில் சமீபத்திய பயங்கரக் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இசம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கண்டு பிடிக்கவும், வழக்கு விசாரணைகக்கு உதவவும், அமெரிக்கா தயாராக இருப்பதாக இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் முல்போர்டு கூறியிருந்தார். அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான எப்.பி.ஐ. வழக்கு விசாரணைக்கு உதவும் என்றும் கூறியிருந்தார். தீவிரவாதிகளோடு தொடர்பு வைத்திருந்தாலும், அவர்களின் உதவியோடும் அசாமிலும், ஆந்திராவிலும் காங்கிஸ் ஆட்சிக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அசாம் பொலிசில் அதிரடி மாற்றம்

(கவுகாத்தி)

அசாமில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடர்கின்றது. தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை தீவிரப்படுத்த அசாம் பொலிஸ் துறையில் அதிரடி மாற்றம் செய்யப்பட்டது.

அசாமில் கடந்த 2ம் திகதியில் இருந்து தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடாத்துகின்றனர். அப்பாவி மக்களை குருவிகளைப் போல் சுட்டுத் தள்ளுகின்றனர். வெடிகுண்டுகளை வைத்து கொல்கின்றனர். இந்தக் கொடூரச் சம்பவங்களைக் கண்டித்து மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் அசாமில் நேற்று முன்தினம் 'பந்த்' நடத்தப்பட்டது.

இதன் காரணமாக வீட்டை விட்டு மக்கள் வெளியே வரவில்லை. 'பந்த்' முடிந்த பின் மார்க்கெட்டிற்கு வந்து மக்களை முகமூடி அணிந்த தீவிரவாதிகள் காட்டு மிராண்டித்தனமாகச் சுட்டனர். அதில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர். போகோரி பாரி காவல் நிலையத்திற்கு உட்பட்ட ஜலாபிலா மார்க்கெட்டில் இச்சம்பவம் நடந்தது.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது. அதற்காக பொலிஸ் துறையில் நேற்று முன்தினம் அதிரடி மாற்றங்கள் செய்தது. தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகளவில் நடக்கும் மாவட்டங்களின் எஸ்.பி.க்கள் பலர் மாற்றப்பட்டனர்.


துப்ரி மாவட்டத்தில் மட்டும் இதுவரை 30க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இம்மாவட்ட எம்.பி.யும் மாற்றப்பட்டார்.

# நானூறாவது விக்கெட்டை வீழ்த்திய கும்ளே தரப்படுத்தலில் 9வது இடம்

அனில் கும்ளே.... நெருக்கடியான நேரங்களில் இந்திய கிரிக்கெட் அணிக்கு நம்பகமானவர். இந்திய அணியில் இருந்து ஒரு காலத்தில் பிரித்துப்பார்க்க முடியாத வீரர். ஹர்பஜன் வருகைக்குப் பறகு, படி சற்றே தளர்ந்தது. ஆனாலும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அணியின் வெற்றிக்கு பங்களிக்கத் தவறாதவர்.




பாகிஸ்தானுக்கு எதிராக 1999ல், ஒரே இன்னிங்சில் 10 விக்கெட் வீழ்த்தி சாதித்த அனில், இந்திய கிரிக்கெட் வரலாற்றில் என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்க



சாதனையை, தனது சொந்த ஊரில் செய்து முடித்தார். சைமன் கேடிச் விக்கெட்டை வீழ்த்திய போது, டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுக்கு மேல் வீழ்த்திய இரண் டாவது இந்தியர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் ஆனார்.

இந்தச் சாதனை செய்ய அவருக்குத் தேவைப்பட்டது 85 போட்டிகள். முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் கபல்தேவ் 131 போட்டிகளில் 434 விக்கெட் எடுத்து, டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்தியர் என்ற முதலிடத்தில் இருக்கிறார். அவரது சாதனையை நோக்கி பயணத்தை துவக்கி விட்டார் கும்ளே. அநேகமாக, இந் தத் தொடர் முடியும் போது, கபல் சாதனையை மிஞ்சும் வாய்ப்புக்கள் அவருக்குக் கிடைக்கலாம்.



பெங்களூர், சின்னசாமி மைதானத்தில் 397 விக்கெட்டுக்களுடன் நேற்று முன் தினம் காலை களமிறங்கிய அனில் கும்ளேவுக்கு அமோக வர வேற்பு. களத்தடுப்புச் செய்ய பவுண்டரி எல்லைக்கு வரும் போதெல்லாம் கரகோஷம் எழுப்ப உற்சாகப்படுத்தினார்கள் ரசிகர்கள். ஆட்டத்தில், 22 ஓவர் முடிந்ததும், அனில் கையில் பந்தைக் கொடுத்தார் அணித் தலைவர். ஒட்டுமொத்த அரங்கமும் எழுந்து நின்று அவரை வாழ்த்தியது. விக்கெட்க் டுகள் அடுத்தடுத் துக் கிடைத்தன. மார்ட்டின் 398, லேமன் 399... அதற்குப் பறகு அனில் பந்து வீசும் போதெல்லாம், அந்த சாதனை வினாடிக்காக காத்திருந்தனர் ரசிகர்கள். 80வது ஓவரின் ஐந்தாவது பந்து... 400வது விக்கெட்டாக கேடிச்சை அவர் வீழ்த்த... அரங்கம் முழுவதும் எழுந்து நின்று கொண்டாடியது. இதே பெங்களூரில்தான் 100 மற்றும் 200வது விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருக்கிறார் கும்ளே. சாதனை வீரரை தேசமே பாராட்டுகிறது.

டெஸ்டில் அதி க விக்கெட்வீழ்த்தியவர்கள்டெஸ்ட் கிரிக்கெட்டில் 400 விக்கெட் வீழ்த்திய இரண்டாவது இந்தியர் மற்றும் சர்வதேச அளவில் இந்த சாதனை நிகழ்த்திய ஒன்பதாவது வீரர் என்ற பெருமையை பெறுகிறார் அனில் கும்ளே.





## டெஸ்ட் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்தோர்

| வீரர் | அணி | டெஸ்ட்போட்டி | விக்கெ |
|---|---|---|---|
| முரளிதரன் | இலங்கை | 91 | 532 |
| வார்ன் | ஆஸி | 112 | 527 |
| வால்ஷ் | வெ.இ | 132 | 519 |
| மெக்ராத் | ஆசி | 97 | 440 |
| கபல்தேவ் | இந்தியா | 131 | 434 |
| ரிச்சர்டு ஹாட்லி | நியூசி | 86 | 431 |
| வாசிம் அக்ரம் | பாக் | 104 | 414 |
| அம்புரோஸ் | வெ.இ | 98 | 405 |
| கும்ளே | இந்தியா | 85 | 400 |
| யோத்தம் | இங்கிலாந்து | 102 | 383 |

# நாவற்காடு, பாலக்காடு பெரும்போக வடிச்சல் கானடி திருத்தப்பட வேண்டும்

மண்முனை மேற்குப் பிரதேசத்தில் இருந்து ஈச்சந் தீவுக்குச் செல்லும் பிரதான வீதியில் இருக்கும் நாவற்காடு , பாலக்காடு பெரும் போக வடிச்சல் கானடி மிகவும் மோசமான முறையில் காணப்படுவதனால் விவசாயிகள் பொது மக்கள் போன்றோர் பெரும் சிரமம் அடைகின்றனர்.



நாவற்காடு பாலைக்காடு பெரும்போக வடிச்சல் கானடியின் நிலைமையினை படத்தில் காணலாம். (படம்-சசி)

கானடியில் போடப் பட்டிருக்கும் மேலதிகமான கதவுகள் யாவும் துருப்பிடித்து இறந்து போன நிலையிலும் அங்கு போடப்பட்டிருக்கும் குழாய்கள் உடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இது உப்பாறுடன் தொடர்புபட்டது. கிராமங்களிலே வயல்களில் மழையினால் தேங்கி நிற்கும் நீர் உப்பாற்றுடன் போய்ச் சங்கமிக்கின்ற ஒரு முகத்துவாரமாகக் காணப்படுகின்ற இடத்தின் நிலைமையை கண்டு மக்கள் கவலையடைகின்றனர்.

நாவற்காடு, பாலக்காடு வயல்களிலே விவசாயம் செய்கின்ற விவசாயிகள் மழையினால் வெள்ளம் தேங்கிக் காணப்படும் போது பெரும் நஷ்டத்தினை அடைகின்றனர். அது மட்டுமன்றி உப்பு நீரானது அந்தக் கானடியின் மூலம் வயல்களுக்கும் கிராமங்களுக்கும் உப்பு வெள்ளம் ஏறுவதால் விவசாயிகள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

எனவே இந்த வீதியில் காணப்படுகின்ற பிரதானமான கானடியை உடனடியாகத் திருத்தி கதவுகள் யாவும் போடப்பட்டு மக்கள் விவசாயிகள் போன்றோர் படுகின்ற சிரமங்களையும் நஷ்ரங்களையும் எதிர் வரும் காலங்களில் தீர்க்கப் பட்டு மக்கள் சிரமங்களின்றி வாழ சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

## பட்டிருப்பில் பேருந்து தரிப்பிடம் இன்மையால் விபத்துகள் அதிகரிக்கும் அபாயம்

பட்டிருப்பு பொதுச் சந்தைக்கு அருகாமையில் வீதியின் இருமருங்கிலும் பேருந்துகள் தரித்து நிற்பதனால் நெடுஞ்சாலைப் போக்குவரத்து பெரிதும் பாதிப்படைகின்றது. வீதியின் விஸ்தீரணம் போதாமையாலும், பாதையோர வியாபாரிகளின் விற்பனை நடவடிக்கையாலும் சன நெருசல் ஏற்பட்டு விபத்துகளும் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

பசுந்தாள் பிரதேசத்தில் போக்குவரத்து சேவையை மேற்கொள்ளும் பேருந்துகளே இப்படித் தரித்து நிற்கின்றன. அத்தோடு களுவாஞ்சிகுடியிலும் பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்படாதது அனைவரும் அறிந்ததே. எனவே இப்பிரதேசத்து மக்களின் நன்மை கருதி பேருந்துத் தரிப்பிட வசதி செய்து கொடுக்க வேண்டும் என எங்கள் குரலினூடாக கேட்டுக் கொள்கின்றோம்.

-பாபா-

# எங்கள் குரல்

## பாவற்கொடிச்சேனைக்குச் செல்லும் சிரமதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

காயான் மடுபொது மயானச் சந்தியிலிருந்து பாவற்கொடிச் சேனை வரைசெல்லும் சிரமதான வீதியானது காயான்மடு, பருத்திச் சேனைக் கிராமங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கின்றது. அத்துடன் இது ஒரு பிரதான வீதியாக இருப்பதால் எப்போது திருத்தப்படும் என மக்கள் ஈழநாதமூடாக கேட்டு நிற்கின்றனர்.

சிரமதான வீதியானது சுமார் 25 வருடத்திற்கும் முன் சிரமதான அடிப்படையில் போடப் பட்ட வீதியாகும் இவ்வீதியில் போடப்பட்ட கிறவல்கள் எல்லாம் தற்போது மணலாகி மணல் வீதியாகவே இவ் வீதியிருக்கிறது. இதனால் இவ்வீதியால் செல்லும் துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் பயணிகள் இவ் வீதியால் உருட்டியே செல்லுகின்ற ஒரு அவலநிலை காணப்படுகின்றது.

மழைகாலமானால் இவ் வீதியானது வாய்க்கால் போல் காட்சி தருவதுடன் இதனால் வீதி சேறாகிப் போகிறது. வீதி சேறாவதால் பயணிகள் , பாதசாரிகள் பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதுடன் அவர்களின் உடைகளும் அசுத்த நீர்பட்டு அழுக்கடைகின்ற நிலையும் ஏற்படுகின்றது. அத்துடன் நோய்க்கிருமிகள் தொற்றும் அபாயமும் உள்ளது.

பிரதேச செயலாளர் அவர்களே பிரதேசசெயலகத்தை விட்டு உங்கள் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராமங்களை குறித்த நேரத்தை ஒதுக்கிப் பார்வையிடுங்கள் அல்லது கிராம சேவகர் மூலமாக கிராமங்களில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை இனம்காண முயற்சி எடுத்து அவர்களின் பிரச்சனைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பது பிரதேச செயலாளரான உங்களின் கடமையல்லவா? அரசாங்கத்திடமிருந்து நிதியினைப் பெற முடியாது என்பது எங்களுக்குத் தெரியும்.

ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காக உதவுகின்றன. இதில் நிக்கொட் திட்ட அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்காக 500 மில்லியன் டொலர் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மேகாத்திட்டம் மூலம் 200 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிறுவனங்கள் ஊடாக உதவியினைப் பெற்று மேற்குறித்த சிரமதான வீதி மற்றும் மண்முனை மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் அடிப்படைப் பிரச்சனைகளை இனம் கண்டு இந்த நிறுவனங்களிடமிருந்து உதவியினைப் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

-சுழியோடி-

## சிந்தனைக்கு!

வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால்தான் நாம் வன்முறைப் போராட்டத்தை தழுவிக் கொண்டோம்.

தமிழீழத் தேசியத் தலைவர்




ஈழநாதம்

மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை

தொலைபேசி : 065-2226110, 065-2226303

batti @ eezhanatham .com

08.10.2004


# இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் விசமிகள்

தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் சமூகங்களின் உறவைச் சீர் குலைத்து குளிர் காய சில விசமிகள் திரைமறைவில் சதி செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. தமிழர் தாயத்தின் உரிமையை மீட்டெடுப்பதற்கான போராட்டம் வலிமையடைந்துள்ளது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என்பதை சர்வதேச சமூகமே இன்று அங்கீகரித்த நிலையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவை சீர் குலைப்பதன் மூலம் சமாதானப் பேச்சுக்களை பலவீனப்படுத்துவதும் இரு சமூகங்களுக்கிடையிலான இன ஐக்கியத்தை சீர் குலைப்பதும் இந்த சக்திகளின் இலக்காக இருக்கலாம்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தின் வட்டமடு மேச்சல் தரை விவகாரத்தை பூதாகரமாக்க சில சக்திகள் முனைந்துள்ளன. அரசியல் பின்னணியை கொண்டியங்கும் இச்சக்திகள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை.

அதற்கடுத்தாற் போல் மன்னாரில் ஒரு போதைவஸ்து கடத்தலுடன் தொடர்புடைய முஸ்லிம் வியாபாரி இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை சாதகமாக்கிக் கொண்ட சில விசமிகள் மேற்கொண்ட துரதிஷ்டவசமான தமிழர் தரப்பை ஆத்திரமூட்ட மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் விடுதலைப் புலிகளின் பொறுமையினால் அமைதிச் சூழலை ஏற்படுத்தியது. மன்னாரில் பதட்டத்தை உருவாக்கி இனக் கலவரம் ஒன்றை மேற்கொள்ள முனைந்ததுடன் சம்பவத்திற்கு சிறிலங்கா பொலிசாரும் உடந்தையாக இருந்தமை வேதனைக்குரியது.

சட்டத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதாகக் கூறும் இவர்கள் தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் சமூகங்களிடையே ஒரு பாரிய கலவரத்தை உருவாக்க உடந்தையாக இருந்துள்ளமை வேதனைப்பட வேண்டிய விடயம். இதேசமயம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பொலநறுவை மாவட்டத்தின் கட்டுவன்வில் பிரதேசத்தில் இரு முஸ்லிம்கள் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி ஒரு பதட்டமான சூழலை ஏற்படுத்தி தமிழ் முஸ்லிம் உறவை சீர் குலைக்கும் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சமயம் உண்மை நிலையை விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். கட்டுவன்வில் படுகொலைக்கும் தங்களுக்கும் எந்த வித சம்பந்தமுமில்லை எனவும் சிறிலங்கா படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் சம்பவம் நடந்துள்ளதால் இதற்கான முழுப் பொறுப்பையும் படைத் தரப்பினரே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர் காலத்திலும் தமிழ் முஸ்லிம் உறவை சீர் குலைத்து அரசியல் ஆதாயம் தேட சில சக்திகள் முயற்சிக்கலாம் அதற்கு உடந்தையாகாது இன ஐக்கியத்தைப் பலப்படுத்தி புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

கடந்த காலத்தில் சில கசப்பான சம்பவங்களால் இரு சமூகங்களிடையேயான உறவில் ஆங்காங்கே தொய்வு நிலை ஏற்பட்ட போதும் தற்போது அவ்வாறான பாரிய சம்பவங்கள் ஏதும் நிகழா வண்ணம் இருப்பது வரவேற்புக்குரியது.


எனவே தமிழர் தாயகத்தில் முஸ்லிம்கள் எவ்வித அச்சம் இடையூறு இன்றி சகல அரசியல் உரிமைகளுடனும் வாழ முடியும் என்பதை உணர வேண்டியது அவசியம்.

# ஈழத்தின் விடிவுக்காய் உயிர் நீத்த மாலதி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்திருக்கின்றார்

## அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(கணன்)

ஈழத்தின் விடிவுக்காய்



இந்தியப்படையின் குண்டுக்கு இலக்காகி மாவீரராகிவிட்ட 2ம் லெப்டினன்ட் மாலதியின் இந்த நினைவு நாள் மக்கள் மனதிலே நீங்காத இடம் பிடித்திருக்கின்றது.

இவ்வாறு நேற்று தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற பெண்கள் சங்கம அமைப்பின் மகளிர் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

தம்பிலுவில் மத்திய மகளிர் வித்தியாலய அதிபர் வி.ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய குயிலின்பன்: தற்போது 17 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கும் இவ்வேளையிலே மகளிரான பெண் கள் அணியினர் இயல்பான ஒரு நாட்டினுடைய கலை, கலாசாரப் பண்பாடுகளை காக்கின்ற அமைப்பினராக பெண்கள் இருப்பது மாத்திரமல்லாது தாய், நாடு தாயகம், என்ற உணர்வோடு வாழ வேண்டும். இந்த நிகழ்வு யுத்தத்திற்கு மத்தியிலே எழுச்சியை ஏற்படுத்துகின்ற நிகழ்வாக அமைகின்றது என்றார்.

# சமாதானப் பேச்சுவார்த்தைளை ஆரம்பிக்கக் கோரி திருமலையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருகோணமலையில் இன்று வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு இக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள குறிப்பில் உள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது, ஆனால், ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. சமாதானத்திற்கெதிரான சதி நாச வேலைகள் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை திணிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதனை எதிர்ப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். தமிழ்ழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால தன்னாட்சி வரைபின் அடிப்படையில் உடனடியாக பேச்சைத் தொடங்கவற்புறுத்தியும் -தமிழீழ தலைநகர் திருமலையில் சட்ட விரோதமான முறையில் வேகமாக கட்டப்பட்டு வரும் பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள் என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் மேலும், இனவாத அமைப்புக்கள் திருமலையைத் தமது வன்முறையின் மத்திய இடமாக மாற்றியுள்ளதனைக் கண்டித்தும் அமெரிக்கா உட்பட சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளை வற்புறுத்துவதனை விடுத்து தென்னிலங்கை சிங்கள இனவாத அரசியல் சக்திகளுக்கே சமாதானம் பற்றி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் -பாதுகாப்புப் படையினர் புதிய காவல் அரண்களை அமைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் காவலரண்களை அகற்றுமாறும், பின் நோக்கி நகர்த்துமாறும் கேட்டுக் கொள்வதைக் கண்டித்தும் மேற்கொள்ளப்படும் ஹாத்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுள்ளது.

# சந்திரிகாவின் சமாதான பேரவை சமாதானத்தை இழுத்தடிக்கும் செயலே

## பாராளுமன்ற உறுப்பினர் ஜெயா

(செ.கோவிந்தசாமி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அமைக்கப்பட்டுள்ள சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான தேசிய ஆலோசனை சபை ஒரு நாடகமாகும். இதனால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை. ம்றாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிக்கும் ஒரு செயலாகவே இது அமையும். கடந்த காலங்களில் அரசினால் அமைக்கப்பட்ட சபைகளும், செய்து கொடுக்கப்பட்ட ஒப்பந்தங்களும் இதனையே வெளிப்படுத்தியுள்ளன. இன்றைய நிலையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையே எமக்குத் தேவை. தேசிய ஆலோசனைசபை தேவை இல்லை. இதன் காரணமாகவே தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு இச்சபையினை ஆதரிக்கவில்லை.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்மூர்த்தி தெரிவித்ததார். வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். வித்தியாலய அதிபர் அ.சுகுமாரன் தலைமையில் நடை பெற்ற விழாவில் பிரதம அதிதி தொடர்ந்து உரையாற்றுகையில்:-

கடந்த இரண்டரை வருட காலமாக நாட்டில் தற்காலிக அமைதி தோன்றியுள்ளது. நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு போர் நிறுத்த உடன் படிக்கை செய்யப்பட்டது. ஆனால் போர் நிறுத்த மீறல்கள் அவ்வப் போது ஆங்காங்கே இடம் பெற்று வருகின்றன. இருப்பினும் விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப் பிடித்து வருகின்றனர்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கவே மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். நாம் எமது உரிமைகளையே கேட்கின்றோம், சலுகைகளை அல்ல என்றார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கி.துரைராஜசிங்கம் வித்தியாலய 4வது வெளியீடான 'ஏர்' சஞ்சிகையை அறி முகம் செய்து வைத்தார்.

கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம்.ஜெயினுதீன், ஏறாவூர் பற்று கோட்டக்கல்வி அதிகாரி இ.வேலுப்பிள்ளை, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் பா.குவேனி ஆகியோரும் உரையாற்றினர். வித்தியாலய அதிபர் அ.சுகுமாரன் தமது ஆண்டறிக்கையில் பாடசாலையின் பௌதீக தேவைகளை சுட்டிக் காட்டினார்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், கௌரவிக்கப்பட்டனர். திருமதி.சு. ஜெயானந்தமூர்த்தி பரிசில்களை வழங்கினார். இறுதியில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.



தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் முன்பள்ளி மேம்பாட்டுப் பேரவையும் இணைந்து கல்முனை உவெஸ்லி பாடசாலையில் நடாத்திய மூவின முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட வடக்குக் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் குத்துவிளக்கேற்றுவதையும் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காண்க. (படம்.ஏ.எல்.எம்.சலீம்)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# பொலிசாரின் கூட்டத்தை மட்டு. கிராம சேவகர்கள் பகிஷ்கரிப்பு!

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெறவிருந்த சிறுவர் சம்பந்தமான கூட்டத்தினை மட்டக் களப்பு கிராம சேவையாளர்கள் நேற்று பகிஷ்கரித்தனர்.**

புத்த பிக்கு ஒருவர் கிராம சேவையாளர் மீது ஆத்திரத்தில் அடித்த சம்பவத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையிலேயே இவர்கள் பகிஷ்கரித்தனர்.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சிறுவர் சம்பந்தமான ஒரு கூட்டத்திற்கு மட்டக்களப்பு நகர (மண்முனை வடக்கு) பிரதேச செயலாளர் பிரிவு கிராம சேவையாளர்கள் அனைவரையும் மட்டக்களப்பு பொலிசார் அழைத்திருந்தனர்.

ஆனால் பிக்குவின் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரைக்கும் இப்படியான கூட்டங்களில் கிராம சேவையாளர்கள் கலந்து கொள்ளவில்லையென மட்டக்களப்பு நகர கிராமசேவையாளர்கள் நேற்று 7ம் திகதி கையொப்பமிட்டு மண்முனை வடக்கு மட்டக்களப்பு நகர பிரதேச செயலாளர் ஊடாக மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

## ஆங்கில டிப்ளோமா தராதரப்பத்திரம் வழங்கும் வைபவம்

(நமது நிருபர்)

நிந்தவூர் சீ.ஓ.லெஸ்தகீர் சர்வதேச கல்லூரியின் ஆங்கில டிப்ளோமா தராதரப்பத்திரம் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை மு.ப.9.00 மணிக்கு கமு.அல்மஸ்ஹர் பெண்கள் உயர் கல்லூரியின் அஷ்ரப் மண்டபத்தில் நடைபெறும்.

க.பொ.த. உயர்தர பரீட்சை எடுத்த தென்கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த 70 மாணவர்கள் 3 மாத முழுநேர ஆங்கில பாடநெறியை பூர்த்தி செய்தமைக்காக இத்தராதரப்பத்திரம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் பிரதம அதிதியாகச் கலந்து கொண்ட தராதரப்பத்திரங்களையும் வழங்கி வைக்க இருக்கின்றார்.

இவ்வைபவம் முன்னை நாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய லெஸ்தகீர் சர்வதேசக் கல்லூரியின் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜனாப் ஐ.எம். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெறும்.

## கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பம்

(வி.ரி.சகாதேவராசா)

எதிர்வரும் 2004.11.06 ஆம் திகதி முதல் வெற்றிடமாகவுள்ள கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை நியமிக்க விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனை இவ் விண்ணப்பத்தைக் கோரியுள்ளது. நேர்முகப் பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்படும் பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்க முடியும்.

1. இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் 1ஐச் சேர்ந்த அதிகாரி அல்லது தரம் 2ஐச் சேர்ந்த அதிகாரி.
2. தற்பொழுது வலயக் கல்விப் பணிப்பாளராக இருப்போர்விண்ணப்பிக்க முடியாது.
3. கல்முனைக் கல்வி மாவட்டத்தில் (கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை) வசிப்பவராகவும், சேவையாற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் 13.10.2004க்கு முன் வந்து சேர வேண்டுமென மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையின் நிருவாக உத்தியோகத்தர் ஏ.எல்.பஷீர் தெரிவித்தார்.

## கல்முனை சிறைக் கூடத்தை மீண்டும் திறக்க பகீரத முயற்சி

(ஏ.எல்.எம்.சலீம்)

கல்முனைப் பிரதேசத்தில் கடந்த அறுபது வருட காலமாக இயங்கிவந்து கடந்தவாரம் மூடப்பட்ட விளக்கமறியல் சிறைக்கூடம் விரைவில் மீண்டும் இயங்கப்படுமென நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டிடத்தில் இயங்கி வந்த மேற்படி விளக்கமறியல் சிறை க்கூடம், நீதிமன்ற வளாகக் கட்டிடப் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க ப்படவிருப்பதையொட்டி, அண்மையில் மூடப்பட்டுள்ளது.

இச்சிறைக் கூடத்தை மூட வேண்டாமெனக் கல்முனைப் பிரதேசத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு தமது ஆட்சேபனைகளையும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன் இச்சிறைக் கூட விடயத்தில் தொடர்ச்சியான அக்கறை கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் இது விடயமாக சிறைச்சாலைக்ள் ஆணையாளர் நாயகமும், சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோரை நேரில் சந்தித்து சிறைக்கூடத்தை மீண்டும் திறந்து தொடர்ச்சியாக இயங்கச் செய்வதன் அவசியத்தை தெளிவுபடுத்தினார்.

இச்சந்திப்பின் பிரகாரம் சிறைக் கூடத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய சிபார்சு செய்யப்பட்டுள்ள கல்முனை பழைய தபாலகக் கட்டிடம், அக்கரைப்பற்று பழைய நீதிமன்றக் கட்டிட வளாகம் என்பவற்றைப் பார்வையிட்டு சாத்தியப்பாடுகளை ஆராயவும்,

அவ்வாறு இக்கட்டிடங்கள் சிறைக் கூடத்திற்குப் பொருத்தமெனக் கண்டறியுமிடத்து, உடனடியாகக் கட்டிடத் திருத்த புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு சிறைக் கூடத்தை மீண்டும் திறப்பதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமும், தம்மிடம் உறுதியளித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்தார்.

### பிக்குவின்...

செயலாளர் பிரிவின் இருதயபுரம் கிராம சேவையாளர் எஸ்.விஜயரெத்தினம் தமது பிரிவு மக்களுடன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது அவர்கள் துப்பரவு செய்த நிலம் இருதயபுரம் பிக்குவிற்குச் சொந்தமானது என மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விட்டு பொலிஸ் நிலையத்திற்குள் இடம் பெற்ற விசாரணையின் போது பிக்கு குறிப்பிடும் நிலம் பிக்குவிற்கு உரியது அல்ல.

என்றும் ஆவணங்களை கிராம சேவையாளர் காண்பித்த வேளையில் அதனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு ஆத்திரப்பட்ட பிக்கு குடையினால் கிராம சேவையாளரைத் தாக்கியது குறித்து வடக்குக் கிழக்கு மாகாண கிராம சேவையாளர் சங்கம் தமது ஆட்சேபத்தினையும், கண்டனத்தினையும் தெரிவிக்கின்றது.

### கல்லாற்றில்...

லிங்கம் என இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவிக்கின்றார்கள்.

நேற்றிரவு வீதியால் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்களினால் இக்கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றார்கள்.

### தேர்தலின்....

த்த வரையில் அதிகளவானோர் அடையாள அட்டைகளைப் பெற முடியவில்லை. தற்போது அவர்கள் அடையாள அட்டையை பெறுவதானால் அதற்கான ஆவணங்களைப் பெற முடியாத நிலையில் அரசு கொண்டு வந்துள்ள இச்சட்ட மூலத்தை ஆட்சேபிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கும் சட்ட மூலம் நேற்று இலங்கை பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டத்தின்படி வாக்காளர் தமது வாக்குகளை அளிக்கும்போது அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இன்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட சமயம் ஆளும் மற்றும் எதிர்கட்சிகளைச் சேர்ந்த 192 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

## இனவாதம் பரப்பிய கருணாரத்ன ஐ.தே.க.யில் இணைய விருப்பம்

(நமது நிருபர்)

சிஹல உறுமய கட்சியின் ஸ்தாபகத் தலைவரான திலக் கருணாரத்ன மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 1995 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட இவர், பின்பு அக் கட்சியிலிருந்து விலகி பௌத்தத்தையும் சிங்களத்தையும் பாதுகாக்கப் போவதாகக் கூறி பௌத்த பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவை 1998 ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஹெல உறுமய கட்சியில் போட்டியிட்ட பௌத்த பிக்குமார்கள் 9 பேர் வெற்றி பெற்றதையடுத்து, தற்போது அக் கட்சி ஜாதிக ஹெல உறுமயவாக இயங்குகின்றது. பௌத்த சிங்கள பேரினவாதப் போக்குடைய திலக் கருணாரத்ன கடும் இனவாதி என பல்வேறு தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டு வருபவர்.

### முத்துக்கல்...

திருகோணமலை குரங்குப்பாஞ்சான் குளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப் போவதாகக் கூறி களனியிலிருந்து யாத்திரை மேற்கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இந்த திடீர் மனமாற்றத்திற்கு காரணம் ஜாதிக ஹெல உறுமயவிலுள்ள பௌத்த பிக்குமார்கள் இவரை ஓரங்கட்டி விட்டமையே என தெரிவிக்கப்படுகின்றது.

வந்த இராணுவ சீருடை தரித்த நபர்கள் இவரை வெளியே அழைத்துச் சென்று இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துள்ளார்கள்.

அப் பிரதேச மக்களின் தகவலின் படி தேசவிரோத குழுவொன்றினால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிய வருகின்றது.

### தாதியர்...

ட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைய அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு நிலுவையுடன் வழங்க வேண்டும் எனக்கோரி இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன் காரணமாக கல்முனை, சம்மாந்துறை, காரைதீவு, அட்டாளைச்சேனை, திருக்கோவில் உட்பட 12 வைத்தியசாலைகளின் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை விலைவாசி உயர்வைக் கண்டித்து நேற்று தலைநகர் கொழும்பிலும், கண்டியிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சட்டி, பானை உட்பட சமையல் பாத்திரங்களையும் ஏந்தியவாறு அரசிற்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். சுகாதார அமைச்சிற்கு முன்பாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் அரசிற்கு எதிராக மற்றுமொரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள 307 கனிஷ்ட சேவையாளர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளவேண்டும் எனக்கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### அரசடித்தீவில்...

த்தில் நடைபெறவுள்ளது.

2ம் லெப்ரினன்ட் மாலதி அவர்களின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பாண்ட் வாத்திய இசை முழங்க அரசடித்தீவு மைதானத்தை வந்தடையும் பின்னர் நிகழ்வுகள் நடைபெறும். தேசியக் கொடி ஏற்றல், மாவீரர் படத்திற்கான மலர் வணக்கம், நினைவுரைகள் என்பன நடைபெறும்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

### தம்பிலுவில்...

உசேந்தினி தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தாரகா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மட்டு.அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி ஏற்றி வைத்தார்.

2ம் லெப் மாலதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகச் சுடரினை தம்பிலுவில் மகா வித்தியாலய அதிபர் ஜயந்தன் ஏற்றினார். திருவுருவப் படத்திற்கு மலர் மாலையினை தம்பிலுவில் கிராம உத்தியோகத்தர் கண்ணன் அணிவித்தார்.

மட்டு. அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், யோகா கனகசபை, வித்தியாலய அதிபர் ஜயந்தன், கிராம அலுவலர்கள் ஆகியோர் உரை ஆற்றினர்.

நிகழ்வில் கலந்து கொண்ட மகளிர் அமைப்பு பிரதி நிதிகள் தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியில் மாலதி அவர்களை நினைவு கூர்ந்தும், தேசியத் தலைவர் அவர்களை வாழ்த்தியும் கலந்து கொண்ட பிரதிநிதிகளால் பாடல் இசைக்கப்பட்டு முனையூர் மகளிர் அமைப்புச் செயலாளர் செல்வி சந்திரிக்காவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. இதில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 08.10.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.